Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 பிரமோதூத ஹு ஆவணி மீ 09 உ ஞாயிற்றுக்கிழமை (26-08-1990) ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 05 கதிர்: 176

# அல்லைப்பிட்டியில் நேற்று துருப்புக்கள் தரை இறக்கம்

## மண்டைதீவுக்கு முன்னேற முயற்சி

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 26

**அல்லைப்பிட்டியில் நேற்று ஸ்ரீலங்கா இராணுவத் துருப்புக்கள் தரையிறக்கப்பட்டன.**

**அங்கு நிலைகொண்டுள்ள துருப்பினர் மண்டைதீவுப் பகுதியை நோக்கி முன்னேற முயற்சிப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.**

நேற்று இருபதுக்கும் அதிகமான தடவைகள் அல்லைப்பிட்டியில் (முன்னரே சேதமடைந்திருந்த) விமல் அலுமினியத் தொழிற்சாலைப் பகுதியில் துருப்புக்கள் தரையிறக்கப்பட்டதாகவும்—

நூற்றுக்கணக்கில் படையினர் இப்பகுதியில் தரையிறக்கப்பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம்—

நேற்று அல்லைப்பிட்டியில் துருப்புக்கள் தரையிறக்கப்படுவதற்கு முன்னர், வேலணைப் பக்கத்திலிருந்து அவ்விடத்தை நோக்கி ஒரு இராணுவப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நல்லூர் ஆலய வீதியில் றொக்கட் தாக்குதல்!

### தேர்க்கொட்டகை சேதம்

நல்லூர் கந்தசுவாமிஆலயப் பகுதியில் [முன் வீதியில்] நேற்றுக் காலை ஹெலிக்கொப்டர் ஒன்று நடத்திய றொக்கட் தாக்குதலினால் தேர்க் கொட்டகை, வைரவர் மண்டபக் கதவு [கேற்] என்பன சேதம் அடைந்தன. ஆலயக் கோபுரக் கண்ணாடிகளும் சிதறிவிட்டன.

ஹெலியைக் கண்டு ஆலய முன்மண்டபத்தில் பாதுகாப்புக்காக ஒதுங்கிய பொது மக்கள்பலரும் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டனர்.

நேற்றுக் காலை எட்டு மணியளவில் இச் சம்பவம் இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் இராணுவத்தினர் ஆனையிறவு சென்றனர்

யாழ்ப்பாணம், ஆக. 26

பரந்தனில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் நேற்று அங்கிருந்து வெளியேறி, ஆனையிறவு முகாமைச் சென்றடைந்து விட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் பரந்தனில் இராணுவத்தினர் முகாமிட்டனர் என்பதும், அவர்களை முகாமில் இருந்து வெளியேற விடாது விடுதலைப் புலிகள் முற்றுகையிட்டு இருந்தனர் என்பதும் தெரிந்தவையே.

(ஒ-5)

## நாச்சிமார் கோவிலடி பகுதியில் பீரங்கி ஷெல்லுக்கு பெண் பலி

யாழ்ப்பாணம், ஆக. 26

மண்கும்பான் கடற்பகுதியில் இருந்து கடற்படைக் கப்பலில் இருந்து ஏவப்பட்ட பீரங்கி ஷெல் தாக்குதல்களில்ஒரு பெண் பலியானார். பலர் காயமடைந்தார்கள்.

மண்கும்பான் கடற் பகுதியில் இருந்த பீரங்கிக் கப்பலில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு முழுவதும் ஏவப்பட்ட ஷெல்கள் பொம்மைவெளி—முஸ்லிம் வட்டாரம், நாச்சிமார் கோவிலடி. ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முல்லைத்தீவில் கடும் மோதல் போராளி ஒருவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 26

முல்லைத்தீவு முகாம் மீது விடுதலைப் புலிகள் தொடர்ந்து கடும் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்தத் தாக்குதல்களினால் படையினருக்கு பெரும் இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம்[வெள்ளி] நடந்த மோதலில் அரியாலையைச் சேர்ந்த கைலாஸ் [கனகசபாபதிலோகேந்திரன்) என்னும் போராளி வீரமரணமடைந்தார்.

இதேவேளை முல்லைத்தீவு இராணுவ முகாம், பொலீஸ் நிலையம் ஆகியன மீது போராளிகள் கடும் தாக்குதல்களை நடத்தினர் என்றும்—

அதில் பல இராணுவத்தினரும் பொலீஸாரும் காயமடைந்தனர் என்றும்—கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

[ஒ-எ-5]

## குடத்தனையில் ஹெலிதாக்கு புலிகள் விரட்டியடிப்பு

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் நேற்று தாக்குதல் நடத்திய ஹெலியை விடுதலைப் புலிகள் விரட்டியடித்தனர்.

இப் பகுதியில் சரமாரியான வேட்டுக்களையும், றொக்கட் தாக்குதலையும் நடத்திக் கொண்டிருந்த ஹெலியை எதிர்த்து புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அதை அடுத்து ஹெலி உயரப் பறந்து, ஓடி மறைந்தது.

(ஒ-5)

## நகரை அண்டிய பகுதிகளில் நேற்று ஓயாத தாக்குதல்கள்

யாழ்ப்பாணம், ஆக. 26

யாழ்ப்பாண நகரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்று முழுவதும் பரவலாக விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஹெலிகள், பொம்மர்கள் என்பன ஒன்றுமாறி ஒன்றாக ஒவ்வொரு பகுதியிலும் நேரத்துக்கு நேரம் தாக்குதல்களை நடத்தின.

காலை 7.15 மணியளவில் நகரப் பகுதியில் பொம்மர்கள் குண்டு வீசத் தொடங்கியதில் இருந்து மாலை 7.30 மணி வரை விட்டு விட்டு இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

நல்லூர், கல்வியங்காடு, நாயன்மார்கட்டு,கோப்பாய், இருபாலை, திருநெல்வேலி, நல்லூர்-கச்சேரி வீதி, முத்திரைச்சந்தி, கொக்குவில், கொழும்புத்துறை ஆகிய

[4 ஆம் பக்கம் பார்க்க]

### பரந்தனில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஆக. 26

பரந்தன் முகாம் மீது நேற்று முன்தினம் (வெள்ளி) விடுதலைப்புலிகள் குறி பார்த்துச் சுட்டதில் சிப்பாய் ஒருவர் பலியானார்.

(ஒ-5)

### நெல்லியடியில் ஹெலித் தாக்கு

யாழ்ப்பாணம், ஆக. 26

நெல்லியடிப் பகுதியிலும் நேற்று ஹெலித்தாக்குதல் இடம்பெற்றது. மூவர் காயமடைந்தனர். (ஒ-5)

### மட்டக்களப்பில் குண்டு வீச்சு: மூவர் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 26

மட்டக்களப்பு, வியாங்குளம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

குண்டு வீச்சுக்கு இலக்காகி மூவர் உயிரிழந்தனர். மேலும் இருவர் படுகாயமுற்றனர். வீடு ஒன்றும் பலத்த சேதமுற்றது.

(ஒ-5)

## யாழ். சின்னப்பள்ளிவாசல் கட்டடமும் ஷெல்லினால் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 26

வெள்ளிக்கிழமை இரவு ஏவப்பட்ட ஷெல்லினால் முஸ்லிம்வட்டாரத்தில் உள்ள சின்னப் பள்ளிவாசலில் ஒரு பகுதி சேதமடைந்தது.

மண்கும்பானில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களில் பதினைந்துக்கும் மேற்பட்டவை பொம்மைவெளி, முஸ்லிம் வட்டாரம் ஆகிய இடங்களில் வீழ்ந்தன.

சின்னப் பள்ளிவாசல் பகுதியில் விழுந்த ஷெல்லினால் பள்ளிவாசலுடன் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆஸ்பத்திரி பாதுகாப்பு செஞ்சிலுவைப் பொறுப்பில்

யாழ்ப்பாணம், ஆக. 26

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியினதும், அதன் ஊழியர்கள், அங்குள்ள நோயாளர்கள் ஆகியோரினதும் பாதுகாப்புக்கான பொறுப்பை செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு பொறுப்பேற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆஸ்பத்திரிக் கட்டடத்தின் உச்சியில் -உயரத்தில் –செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொடி பெரிய அளவில் நேற்று முதல் பறக்கவிடப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 'சீ-நோர்' கட்டடத்தில் இராணுவத்தினர் நிலை

### பொதுமக்களின் சடலங்கள் மீட்பு

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிப் பாலாவோடைப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் பின்நோக்கிச் சென்று 'சீ-நோர்' நிறுவனக் கட்டடத்தில் நிலைகொண்டிருப்பதாக அறியவருகிறது.

இதற்கிடையில் இராணுவத்தினர் அப்பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது காணாமற்போனதாகக் கருதப்பட்ட சிலர் உட்பட ஏழுபேர் தற்போது சடலமாக மீட்கப்பட்டிருக்கின்றனர்.

வயோதிபர் ஆறுமுகம் அவரது மனைவி வள்ளியம்மை ஆகியோரின் சடலங்கள் கருகிய நிலையில் வீடொன்றிலிருந்து மீட்கப்

[4 ஆம் பக்சம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### மலிவு விற்பனை

V. K. M. Farm

எம்மிடம் புறொயிலர்ஸ் இறைச்சிக் கோழி என்பன மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். சில்லறை விலை (50/-) தொடர்பு 12, கனகசபை லேன், (யாழ்/ இந்துக் கல்லூரி பின்பக்கம்) யாழ்ப்பாணம்.

[13917]

### அடையாள அட்டை கவறிடுதல்

உங்கள் அடையாள அட்டைகளுக்கு கவறிட்டுக் கொள்ள(Lamination) கிளீன் கட் 37, சிவகுருநாதர் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்,

]14100]

### தமிழ் மல்ரி சேவிஸ்

எமது சேவை குளப்பிட்டி வீதி உயரப்புலம் ஆனைக் கோட்டையில் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டு இருக்கின்றது என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம். திருமணசேவை, காணி வாங்கல்- விற்றல், படம் வரைதல் போன்ற சேவைகள் நடைபெறுகின்றன.

(14084)

### டில்கா வாச் வேக்ஸ்

எமது ஸ்தாபனம் தாக்குதலிற்கு உள்ளானதால் உயரப்புலம் குளப்பிட்டி வீதியில் தற்காலிகமாக இயங்குகின்றது. திருத்துவதற்கு தந்த உங்கள் கடிகாரங்களை உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். கடிகாரங்கள் திருத்திக் கொடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

(14083)

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



### அன்னலிங்கம் இராஜசேகரம்

தோற்றம்:
22 - 11 - 1966

மறைவு:
26 - 08 - 1988

உமது ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கிறோம்.

உமது பிரிவால் வாடும்.
அப்பா, அம்மா, அத்தான். அக்காமார், அண்ணா, தங்கைமார், மருமக்கள், மாமி, உற்றார், உறவினர், நண்பர்கள், சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

[14073]

# வலி. வடக்கில் மாதாந்த உதவிப் பணம்வழங்க ஏற்பாடு

காங்கேசன்துறை, ஆக. 26

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மாதாந்த உதவிப்பணம் வழங்க விசேட ஏற்பாடுகள் சேய்யப்பட்டுள்ளன.

கடந்த ...ன் மாதத்துக்கான கொடுப்பனவுகள் இது வரை வழங்கப்படவில்லை.

வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. இராசையா மேற்கண்ட நடவடிக்கையின் பலனாக, துர்க்காபுரத்தில் தற்காலிகமாக இயங்கும் தெல்லிப்பழை, காங்கேசன்துறை தபாலகங்கள் ஊடாகவும், அச்சுவேலியில் தற்காலிகமாக இயங்கும் வயாவிளான் தபாலகம் ஊடாகவும் அளவெட்டி, இளவாலை தபாலகங்கள் ஊடாகவும் உதவிப்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அந்த தபாலகங்களில் சமூகமளித்து பணத்தைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. [இ-68]

# அரசாங்க சார்பற்ற நிறுவனங்களிடம் உணவு, மருந்தை ஒப்படைக்கவலியுறுத்து

## பிரசைகள் குழு மகஜர்

யாழ்ப்பாணம், ஆக. 26

யாழ் குடாநாட்டிலிருந்து 10 லட்சம் மக்களையும் வெளியேற்றி தீர்மானிக்கப்படாத இடங்களில் நிறுவப்படும் முகாம்களில் தங்கவைப்பது என்ற அரசாங்கத்தின் யோசனை குறித்து மக்களின் அதிர்ச்சியையும் கவலையையும் தங்களுக்கு நாம் தெரிவிக்கிறோம். வழமைக்கு மாறான, ஜனநாயகத்துக்கு முறனான மக்களின் அடிப்படை உரிமைகளை மறுக்கும் இந்த நடவடிக்கையை அனைத்து மக்களும் எதிர்க்கிறார்கள்.

யாழ்ப்பாணம் பிரஜைகள் குழு ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு இம்மாதம் 20 ஆம் திகதி அனுப்பி வைத்த மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ். குடாநாட்டில் இருந்து மக்களை வெளியேற்றுவது, அவர்கள் தமது சொந்த வீடு வாசல்களை விட்டு அகதிகளாகச் செல்ல நிர்ப்பந்திக்கின்றது. அவர்களின் வீடுகள் உடமைகள் கொள்ளை அடிக்கப்படவும் அழிக்கப்படவும் இது வழி வகுக்கும்.

### உணவுப்பொருள்

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் போதுமானதாக இல்லை. அரச அதிபர்கள் எதுவும் செய்ய முடியாத நிலையில் உள்ளனர். அரசு சார்பற்ற நிறுவனங்களும் இந்த நிலையில்தான் உள்ளன.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் நெற் செய்கை அழிந்துபோய் விட்டது தொடர்ச்சியான விமானத் தாக்குதல்கள், துப்பாக்கிப் பிரயோகங்களால் சேமித்து வைக்கப்பட்ட தானியங்களும் சேதமடைந்து விட்டன.

### பட்டினிச்சாவு

மட்டக்களப்பு, கிளிநொச்சிப் பகுதிகளில் சுமார் 30 பட்டினிச்சாவுகள் இடம்பெற்றுள்ளன. இக் சூழ்நிலையில் தான் மக்கள் வேறு நாடுகளில் தஞ்சம் அடைய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு உதவிகள் மூலம் வழங்கப்படும் பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதிபான உணவு மற்றும் மருந்து வகைகவ செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கமிட்டி, அரசு பாதுகாப்புப்படை, விஷேட அதிரடிப்படை ஆகியவற்றின் ஊடாக இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நடைமுறை தோல்வி கண்டுள்ளது.

இந்தப் பணியை அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றோம்.

### கறுப்புச்சந்தை

எரிபொருள் கூட இங்கு கிடைப்பதாக இல்லை. கறுப்புச்சந்தையில் ஒரு போத்தல் பெற்றோல் 135 ரூபாவாகவும் டீஸல் 145 ரூபாவாகவும் மண்எண்ணெய் 110 ரூபாவாகவும் விற்கப்படுகிறது.

இது தனியார் மற்றும் அரசு போக்குவரத்துச் சேவைகளை முற்றாக ஸ்தம்பிக்கச் செய்து உள்ளது.

### வேலை இல்லாத் திண்டாட்டம்

மேற்கூறப்பட்ட காரணிகளால் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றின் நடவடிக்கைகள் செயலிழந்து விட்டன. வேலையில்லாத் திண்டாட்டம் 90 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

வங்கிகள் இயங்காமையால் பணப் புழக்கம் குறைந்து, எமது பொருளாதாரத்துக்கு சாவுமணி அடித்துள்ளது.

ஆகவே கீழ்வரும் நடவடிக்கைகளை எடுக்கும்படி கோருகிறோம்:

1. அத்தியாவசிய உணவுப் பொருள்கள், மருந்துவகைகள், எரிபொருள்கள் ஆகியவை ஒழுங்காகக் கிடைக்க, வவுனியா ஊடாக இப் பொருள்களை ஏற்றி வரும் லொறிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும்.

2. சகல அரசு மருத்துவமனைகளையும், குறிப்பாக, யாழ். போதனா ஆஸ்பத்திரியையும் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுத்தல்.

3. சுன்னாகத்தில் உள்ள அனல் மின் நிலையம் திருத்தப்படவேண்டும். அதேநேரத்தில் யாழ்ப்பாணத்துக்கு நீர் மின் விநியோகத்தை வழங்க மாற்று வழி மேற்கொள்ளப்படவேண்டும்.

4. குடியிருப்புப் பகுதிகளை இலக்காக வைத்து விமானங்களில் குண்டு வீசுவதையும் ஹெலிக்கொப்டரில் இருந்து ரொக்கட் தாக்குதல் நடத்துவதையும் ஆட்டிலறி ஷெல் தாக்குதலையும் பீரங்கிப் படகுகளில் இருந்து ஷெல் தாக்குதல்களையும் நடத்துவதை நிறுத்த வேண்டும்.

நச்சுவாயுக்களைக்கொண்ட குண்டுகள் யாழ்ப்பாணத்தில் வீசப்பட்டன. அக்குண்டுகளைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அவற்றில் பொட்டாஸியம் நைட்றேட், குளோரின் கலவை, நைதரஜன், பொஸ்பொரஸ், அலுமினியம் துகள்கள், சல்பர், நைட்ரோ செல்லுலோஸ் ஆகியன அடங்கியிருந்தது தெரிய வந்தது. அப்படியான நச்சுக் குண்டுகளை உபயோகிப்பதை நிறுத்த உத்தரவிடும் படியும் வேண்டுகின்றோம்.

இப்படி மகஜரில் கூறப்படுகிறது. (இ - எ)

# ஐக்கிய ஜேர்மனிக்கான இறுதித் திகதி அக்டோபர் 3

கிழக்கு பெர்லின், ஆக. 26

கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் இணைந்து 'ஐக்கிய ஜேர்மனி' ஆவதற்கான இறுதித் திகதி எதிர்வரும் அக்டோபர் 3 ஆம் திகதி... கிழக்கு ஜேர்மனியின் நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது.

முன்னர் இணைப்புக்கான திகதி அக்டோபர் 14 ஆம் திகதி என்று கிழக்கு ஜேர்மன் பிரதமர் ... தெரிவித்திருந்தார். (இ-எ)

## சாவகச்சேரி இந்துவுக்கு இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி, ஆக. 26

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இயங்கி வந்த தென்மராட்சி அகதிகள் நிவாரணக் கழகத்தின் தகவல் நிலையமும், மருத்துவப் பிரிவும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளன. [இ-117]

## அவசரகாலம் மேலும் நீடிப்பு

கொழும்பு, ஆக. 26

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் 48 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

ஆதரவாக 116 எம்பிக்களும் எதிர்த்து 68 எம்பிக்களும் வாக்களித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் எம்பிக்கள் வாக்களிப்பு சமயம் சபையில் இருக்கவில்லை. [அ-எ]

## பாடசாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 26

யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து நீரிறைக்கும் மோட்டார், 2 மின் விசிறிகள் உட்பட பல பெறுமதிவாய்ந்த பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

விமானத் தாக்குதல் நடைபெறுவதை சாதகமாகப் பயன்படுத்தி பகலிலேயே இத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன என்று அறிய வருகிறது. (இ-ரி-69)

## இடமாற்றம்

### ★ தர்சினி வைத்தியசாலை ★

தர்சினி வைத்தியசாலை மட்டக்களப்பிலும், கொழும்புத்துறையிலுமிருந்து தற்போது மானிப்பாய் கனகசபை வீதி, [புளியடி வைரவர் கோவிலடி]யில் 27-08-90 தொடக்கம் இடமாற்றப்பட்டுள்ளது.

டாக்டர் க. வைரமுத்து
M. I. H. B. (I. N. D.) R. H. M. P. (Cey)

[14098]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
13 - 10 - 1935

மறைவு:
05 - 09 - 1989

திதி:
26 - 08 . 1990

### அமரர் உயர்திரு கனகசபை செல்வரெட்ணம்

[முன்னாள் அதிபர் புங்குடுதீவு மகாவித்தியாலயம் புங் - இறுப்பிட்டி அ. மி. த. க. வி. அதிபர்]

ஆண்டாண்டு தோறும் அழுது நான் புரண்டாலும்
ஆண்டவனின் சன்னதிக்கு அற்பணமாய் சென்றதனால்
நாடாண்ட மன்னவரும் முடிவதனில் பிடிசாம்பர்
வாடாமல் இருக்கின்றோம் வந்திடுக சாந்தி அப்பா.

இந் நாளில் உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

44/3 மணல்தறைலேன்,
யாழ்ப்பாணம்.

(13915)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் பல பகுதிகளிலே பிரதான சந்தைகள் செயலிழப்பு

## பழைய சந்தைகள் புத்துயிர்

பச்சிலைப்பள்ளி, ஆக. 26
விமானத் தாக்குதல்கள் காரணமாக வடக்கின் பலபகுதிகளில் பிரதான சந்தைகள் செயலிழந்துள்ளன.

தென் மராட்சியில் பிரதான சந்தைகளான சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகள் காலை எட்டு மணியுடன் சன சந்தடியின்றிப் போகின்றன.

இதனால் பழைமை மிக்க மிருசுவில், எழுது மட்டுவாள் சந்தைகள் மீண்டும் புத்துயிர் பெற்று வருகின்றன. அத்துடன் முக்கிய சந்திகளில் பல குட்டிச் சந்தைகளும் புதிதாக உருவாகி வருகின்றன.

தென்மராட்சிப் பகுதியில் நிகழும் வான் தாக்குதல்கள் காரணமாக வியாபாரிகள் சாவகச்சேரி, கொடிகாமம் சந்தைகளுக்குச் செல்வதற்கு தயங்குவதால் இக் குட்டிச் சந்தைகள் பிரபலமடைந்து வருகின்றன.

அத்துடன் கண்டி வீதியின் பல இடங்களில் கொட்டில் கடைகளும் உருவாகியுள்ளன.

மா தட்டுப்பாடான இவ் வேளையில் கூட இடியப்பம், பிட்டு, தோசை, வடை போன்ற சிற்றுண்டி உணவுகள் தாராளமாக இக்கொட்டில் கடைகளில் விற்பனையாகின்றன. (இ-117)

## விநாயகர் சதுர்த்தி

யாழ்ப்பாணம், ஆக. 26
யாழ். குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்து அமுலில் இருந்த போதிலும், நேற்று முன்தினம் குடாநாட்டில் உள்ள விநாயகர் ஆலயங்களில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு விசேட பூசைகளும், வழிபாடுகளும் இடம் பெற்றன.

பெரும் எண்ணிக்கையான அடியார்கள் வழிபாடுகளில் கலந்து கொண்டனர். (ஒ-ரி)

## செஞ்சிலுவைப் பிரதிநிதி இனிக் கண்காணிப்பார்

யாழ்ப்பாணம், ஆக. 26
மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரி மீது மீண்டும் வானத் தாக்குதல் நடைபெறாமல் தவிர்ப்பதற்கான ஏற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதி ஒருவர் ஆஸ்பத்திரிப் பகுதியில் எந்த நேரமும் கடமையாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆஸ்பத்திரி மீது தாக்குதல் நடத்தப்படமாட்டாது என மீண்டும் மீண்டும் உறுதியளிக்கப்பட்ட பின்னரும் கடந்த வியாழன் நள்ளிரவு மூன்றாவது தடவையாக ஆஸ்பத்திரி மீது வான் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதனை அடுத்தே செஞ்சிலுவைச் சங்க சர்வதேச பிரதிநிதி ஒருவரை ஆஸ்பத்திரிப் பகுதியில் தங்க வைக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. (உ-3)

### மானிப்பாய் ஆஸ்பத்திரியில்

## 850 ஊழியர்களில் 15 பேர் மட்டுமே கடமை!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 26
மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஊழியர்களில் 15 பேர் மட்டுமே கடமையாற்றுகிறார்கள்.

பாதுகாப்பின்மையைக் காரணம் காட்டி ஏனையோர் கடமைக்கு வருவதில்லை என்று வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையில் கடமை புரியும் ஊழியர்களின் எண்ணிக்கை 850 ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. [ஒ-3-5]

## சுழிபுரம், மூளாய்பகுதிகளில் கண்டபடி ஹெலித் தாக்கு

சுழிபுரம், ஆக. 26
சுழிபுரம், மூளாய்ப்பகுதிகளில் நேற்று முன் தினம் ஹெலிகள் அடிக்கடி வேட்டுக்களைத் தீர்த்தன. றொக்கட்டுக்களையும் ஏவித் தாக்குதல் நடத்தின.

என்றுமில்லாதவாறு நேற்று காலை தொடக்கம் மாலை வரை ஹெலிகள் அடிக்கடி பலாலிப் பக்கமாக இருந்து காரைநகரை நோக்கிப்பறந்தன.

அப்போதெல்லாம்கண்டகண்டமாதிரி கண்மூடித் தனமாக வேட்டுக்களையும் றொக்கட்டுகளையும் தீர்த்தன.

காலை 7 மணியளவில் ஹெலி ஒன்று தீர்த்த வேட்டினால் வருத்தோடையில் வயிரவநாதன் என்பவர் காயமுற்றார். (அ-28)

## துர்க்கை அம்மன் கொடியேற்றம்

திருநெல்வேலி, ஆக. 26
தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் ஆலயகொடியேற்ற விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கொடியேற்றத்தின் போது பெரும் திரளான பக்தர்கள் ஆலய சுற்றாடலில் கூடியிருந்தார்கள். பாதுகாப்புக் கடமையில் வழமைபோல் ஆலயத் தொண்டர்கள், சாரணர்கள், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் ஈடுபட்டிருந்தனர். (இ-143)

## திரும்பிச் சென்ற கப்பலை மீண்டும் கொண்டுவர முயற்சி

திருகோணமலை, ஆக. 26
பருத்தித்துறையில் நங்கூரமிட்டு ஊரடங்குச் சட்டம் காரணமாகப் பொருள்களை இறக்காது திரும்பிச் சென்ற கப்பலை மீண்டும் யாழ்ப்பாணம் கொண்டுவர யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் வடக்கு — கிழக்கு அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர் திரு. தேவநேசன் நேசையாவுடன் தொடர்பு கொண்டுள்ளார். (இ-143)

## இடம்பெயர்ந்த ஆசிரியருக்கு இம் மாதமும் முற்பணம்

யாழ்ப்பாணம், ஆக. 26
வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்களுக்கு ஆகஸ்ட் மாதமும் சம்பள முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஜூலை மாதம் வழங்கப்பட்டது போன்று இம் மாதமும் முற்பணம் வழங்கப்பட உள்ளதாகக் கூறினார் அவர். (இ-3)

## ஷெல் தாக்கி வீடுகள், கடைகள் பெரும் சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 26
புல்மோட்டை இராணுவ முகாமிலிருந்து கடந்த புதன் கிழமை இரவு குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் இப்பகுதியில் பல வீடுகள், கடைகள் பெரும் சேதமடைந்தன.

ஷெல் தாக்குதலை அடுத்து சுமார் 200 குடும்பங்கள்வெளியேறி, புடவைக்கட்டுப்பகுதியில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களில் அனேகமானோர் முஸ்லிம்கள் ஆவர். [ஒ-5]

## ஓட்டோவில் மூவர் மட்டும்

கொழும்பு, ஆக. 26
ஓட்டோவில் மூன்று பேருக்கு மேல் ஏற்றிச்செல்ல கொழும்பில் உள்ள பொலீஸ் போக்குவரத்துப் பிரிவு தடை விதித்து உள்ளது.

மணிக்கு 32 கிலோ மீற்றர் வேகத்துக்குமேல் ஓட்டோவை ஓட்டக்கூடாது என்றும் பொலீஸ் தடை உத்தரவில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

## திருமலையில் தினமும் சுற்றி வளைப்பு

யாழ்ப்பாணம், ஆக.26
திருகோணமலையில் தினமும் படையினரின் சுற்றி வளைப்புகள் நடைபெறுகின்றன.

இரவு- பகல் என்று பாராது திடீர் திடீரென படையினர் கிராமங்களைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்துகிறார்கள்.

நேற்று முன்தினம் நகர்ப் பகுதியில் இடம்பெற்ற தேடுதலில் பல இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஊரடங்கு நேரங்களில் அம்புலன்ஸ் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஆக. 26
வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனங்கள் ஊரடங்கு வேளையிலும் சேவையாற்ற பாதுகப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

நோயாளர்களை வைத்தியசாலைகளுக்கு எடுத்துவர அம்புலன்ஸ் வாகனங்கள் சேவையாற்ற வேண்டும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் விடுக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனங்கள் ஊரடங்கு வேளையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. [இ-3]

## றொக்கட் தாக்குதலில் காயம்

யாழ்ப்பாணம், ஆக 26
ஹெலியில் இருந்து ஏவப்பட்ட றொக்கட்டினால் யாழ். கே.கே. எஸ் வீதி சிவலிங்கப் புளியடியைச் சேர்ந்தவர் ஒருவர் காயம் அடைந்தார்.

வியாழன் நண்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஞானசுந்தரம் என்பவரே காயம் அடைந்தவர் ஆவார் ஹெலிக் கொப்டரிலிருந்து ஏவப்பட்ட றொக்கெட் ஒன்று அவரது வீட்டைத் தாக்கியதாலேயே அவர் காயமுற்றார். (இ)

## மகோற்சவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 26
இன்று ஆரம்பமாகவிருந்த பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவம்,நாட்டில்நிலவும் அசாதாரண சூழ்நிலைகாரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [இ-ரி-28)

## பிரெஞ்சு வைத்தியர் குழு மீண்டும் வருவது ஊர்ஜிதம்

யாழ்ப்பாணம், ஆக. 26
மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு பிரெஞ்சு வைத்தியர் குழு நாளை வருவது ஊர்ஜிதாகிவிட்டது.

மந்திகை ஆதார வைத்திய சாலையில் இதுவரை கடமையாற்றிய பிரெஞ்சு வைத்தியர் குழு கொழும்பில் இருந்து வந்த அழைப்பை அடுத்து கடந்த புதன்கிழமை கொழும்பு சென்றது.

மற்றுமொரு பிரெஞ்சு வைத்தியர் குழு நாளை திங்கட்கிழமை வரும் என்றும், அந்தக் குழு வர வசதியாக செஞ்சிலுவைச் சங்க வாகனத்தை கேரதீவுக்கு அனுப்புமாறும் கடந்த புதன்கிழமை கொழும்பு திரும்பியபிரெஞ்சு வைத்திய குழு தெரிவித்திருந்தது.

நாளை திட்டமிட்ட படி புதிய வைத்தியர் குழு வரும் என்று நேற்று முன்தினம் கொழும்பில் இருந்து தகவல் வந்துள்ளதாக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## கிளிநொச்சி அலுவலகங்கள் இயங்க முடியாத நிலையில்

யாழ்ப்பாணம், ஆக. 26
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பெரும்பான்மையான அரச அலுவலகக் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதால் இயங்கமுடியாத நிலையில் உள்ளன.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் இதனைத் தெரிவித்தார்.

செயலகம், விவசாயத் திணைக்களம், வங்கிபோன்ற அத்தியாவசிய சேவைகள் கட்டடங்கள் அங்கு சேதமாக்கப்பட்டுள்ளன. தற்காலிகமாக நகருக்கு வெளியே இந்தத் திணைக்களங்கள் இயங்குகின்றன. ஆனாலும் முழுமையாகச் செயல்பட முடியாதுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

செயலகம் தற்காலிகமாக ஜெயந்தி நகரில் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார். [இ-3]

## தட்டுப்பாடு

வல்வெட்டித்துறை, ஆக. 26
வடமராட்சிப் பகுதியில் முத்திரைக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது
[இ-160]

## கல்முனை வங்கிகள் இயங்கும்

கொழும்பு, ஆக. 26
இலங்கை வங்கி, மற்றும் மக்கள் வங்கிக் கிளைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் கல்முனையில் மீண்டும் இயங்க ஆரம்பிக்கும்.

ஜூன் மாத ஓய்வூதியம் வழங்கும் வேலைகளும் திங்கள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## நீதி விசாரணை

சென்னை, ஆக. 26
ஒட்டோ சங்கர் உட்பட ஐந்து கைதிகள் சென்னை மத்திய சிறையில் இருந்து தப்பிய விவகாரம் குறித்து நீதி விசாரணை நடத்தி அறிக்கை சமர்பிக்க முன்னாள் நீதியரசர் எம். எம். இஸ்மாயிலை தமிழக அரசு நியமித்து இருக்கிறது. [எ]

## பஸ் வசதி

கொழும்பு, ஆக. 26
குவைத்தில் இருந்து நாடு திரும்பும் இலங்கையருக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கொழும்பு நகர் வரை இலவச பஸ் பயண வசதியை அளிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-எ)

## மட்டக்களப்பிலிருந்து அரிசி எடுத்துவரத் தடை

கொழும்பு, ஆக. 26
மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து ஏனைய மாவட்டங்களுக்கு நெல், அரிசியை எடுத்துச் செல்வதற்கு மறு அறிவித்தல் வரை தடை விதிக்கப்பட்டு உள்ளது.

உணவுப் பொருள்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கு முகமாகவே இத் தடை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் தெரிவித்தார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநெல்வேலியில் பொம்மர் றொக்கட் தாக்கு!

## இருவர் காயம்; ஆறு வீடுகள் சேதம்

திருநெல்வேலி மாரியம்மன் வீதியில் நேற்றுக்காலை 10-30 மணியளவில் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரண்டு பேர் காயம் அடைந்தனர். ஆறு வீடுகளும், ஒரு வாகனமும் சேதமடைந்தன.

சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் வானில் வட்டமிட்டபடியே இருந்த இரண்டு விமானங்கள் திடீரென இரு தடவைகள் றொக்கட் தாக்குதலை நடத்தின.

நயினாதீவைச் சேர்ந்த தி. யோகநாதன் (வயது 37), திருநெல்வேலியைச் சேர்ந்த த. மகேஸ்வரி (வயது 70) ஆகியோரே காயமடைந்தனர்.

யோகநாதன் என்பவர் தலையில் பலத்த காயமடைந்து ஆபத்தான நிலையில் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார். (ஒ-143)

# கல்வியங்காட்டில் நேற்று சந்தை மீது ஹெலி தாக்கு

கல்வியங்காட்டுச் சந்தைப் பகுதியை நோக்கி நேற்றுப் பகல் 11 மணியளவில் ஹெலி நடத்திய தாக்குதலில் அங்கு நின்ற இருவர் பலத்த காயமுற்றனர்.

கந்தளாயில் இருந்துஇடம் பெயர்ந்துவந்துதிருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலையில் அகதியாக இருந்த கணேசசுந்தரம் (40 வயது) என்பவரும் மிருசுவிலைச் சேர்ந்த அரியரட்ணம் [29 வயது] என்பவரும் மற்றும் சிலரும் காயமடைந்தனர்.

இப்பகுதியில் இருந்த கடைகளின் ஓடுகளும் சேதமுற்றன. (ஒ-143)

# ஹெலியால் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஆக. 26

வெள்ளிக்கிழமை இரவும் நேற்றுக் காலையும் மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதல்களில் 3 பேர் படுகாயமடைந்து மானிப்பாயில் உள்ள யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

எஸ். ஆனந்தராசா (வயது -50) நல்லூர், சு. சுப்பிரமணியம் (வயது-30) அச்சுவேலி, தேவாகான் (வயது-19) மாதகல் ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர். (இ-113)

# உணவு வாங்கச் சென்றவர் ஹெலி தாக்கி மரணம்

ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட போது இருவர் அதே இடத்தில் மரணமானார்கள்.

இந்தச் சம்பவம் கடந்த 20ஆம் திகதி மாலை ஆனையிறவு கொம்படி வெளி என்னும் இடத்தில் இடம் பெற்றது.

சம்பவம் நடைபெற்ற இடத்தினூடாகவே கிளிநொச்சிப் பகுதியிலிருந்து சைக்கிள் மூலம் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுவது வழக்கம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹெலியிலிருந்து சுடப்பட்ட சமயம் அவ்வழியால் சைக்கிளில் சென்ற பலர்காயமடைந்திருக்கலாமென அஞ்சப்படுகிறது.

முகமாலை தேவாலயத்தில் தங்கியுள்ள அகதிகளுக்குஉணவுப் பொருள்கள் எடுத்துவரச் சென்ற முகமாலை பங்குத்தந்தை பிரான்சிஸ் அடிகளும் உதவியாளரும் இத் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது மயிரிழையில் உயிர் தப்பினர். (இ-117)

## சிநோர்...

பட்டன. வள்ளியம்மையின் சடலத்தின்மேல் அவரது பேரப்பிள்ளையான திருமகள் [வயது 28] என்பவரின் சடலம் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டது

விளானையைச்சேர்ந்த தம்பன் என்பவரின் சடலமும் அப்பகுதியில் கிடக்கக்காணப்பட்டது.

இச்சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன.

தோப்புக்காட்டுப் பகுதியில் நேற்று மீட்கப்பட்ட நகுலேஸ், முருகவேள் ஆகிய இருவரினதும் சடலங்கள் நேற்றே அடக்கம் செய்யப்பட்டன.

அம்பிளா பகுதியில் வீடு ஒன்றுக்குள் மற்றொரு சடலம் அடையாளம் காணப்படாதநிலையில் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது,

## ஆஸ்பத்திரி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டிருக்கிறது.

இரவிலும் இந்தக் கொடி துல்லியமாகத் தெரியக்கூடியதாக அதனை நோக்கி நிலத்திலிருந்து வலு கூடியபல்புகள் மூலம் ஒளி வெள்ளம் பாய்ச்சப்பட்டிருக்கிறது.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில். (உ-5)

## நகரை அண்டிய . . . .

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இடங்கள் மாறிமாறி ஹெலிகளினதும், பொம்மர்களினதும் தாக்குதல்களுக்கு உள்ளாகின.

ஹெலிகள் சனநடமாட்டத்தைக் கண்டதும், வாகனங்கள் செல்வதைக் கண்டதும் வேட்டுக்களையும், றொக்கெட்டுகளையும் தீர்த்தன.

பொம்மர்களும் அனேகமாக அவ்வாறே செய்தன.

திருநெல்வேலி, கல்வியங்காடு, மருதனாமடம்,சுன்னாகம் சந்தைப் பகுதிகளிலும் ஹெலித் தாக்குதல்கள் இடம் பெற்றன.

கல்வியங்காட்டுப் பகுதியில் சுமார் இரண்டரை மணி நேரம் ஹெலிகள், பொம்மர்கள் தாக்குதல் நடத்தின. அங்கு வீதிகள் தோறும்குண்டுகள் துளைத்த அடையாளங்கள் காணப்பட்டன.

ஊரடங்கை அமுல் செய்வதும், மக்களைப் பதற்றமடையச் செய்வதுமே நேற்றைய ஓயாத தாக்குதல்களின் நோக்கமாக இருந்தது. (அ-3 5-143)

# வள்ள ஓட்டி பலி

கொழும்புத்துறை கல்முனை கடற்பகுதியில் நேற்று முன்தினம் (வெள்ளி)வள்ளம் ஒன்றின் மீது ஹெலி தாக்கியதில் படுகாயமடைந்து மானிப்பாய் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று மரணமானார்.

பொலிகண்டியைச் சேர்ந்த வள்ள ஓட்டியான மரியதாஸ் ரவி (வயது 28) என்பவரே மரணமானவர் ஆவார்.

## சவூதியில்குவைத் அரசு

ஈராக்கின் படையெடுப்பைத் தொடர்ந்து சவூதி அரேபியாவில் அடைக்கலம் புகுந்த குவைத் மன்னர், சவூதியில் மலைநகரம் ஒன்றில அரசாங்கம் ஒன்றை அமைத்திருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

குவைத் நாட்டின் சட்டபூர்வமான அரசாங்கம் இது என்று மன்னர் அறிவித்திருக்கிறார். (அ-எ)

## சிறுமி மரணம்

கடந்த வியாழக்கிழமை இரவு பொம்மைவெளியில் மேற்கொள்ளப்பட்ட ஹெலித் தாக்குதலில் படுகாயமடைந்த 11 வயது முஸ்லிம் சிறுமி மரணமானார்.

வியாழக்கிழமை இடம்பெற்ற ஹெலித் தாக்குதல்களில் காயமடைந்த நால்வர் மானிப்பாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஒருவரான பொம்மைவெளியைச்சேர்ந்த உஸ்மான் ஜயூரி என்னும் சிறுமியே மரணமானவர் ஆவார். (ஒ-3-ரி)

## யாழ். சின்னப்பள்ளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாஸா நலன் புரிச்சங்க கட்டடம் மற்றும்சிறு கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன.

அதேவேளை 200 முஸ்லிம் அகதிக் குடும்பங்கள் தங்கியிருந்த ஒஸ்மானியாக் கல்லூரியில் விழுந்த ஷெல்லால் மதில் சுவர்கள் உடைந்தன.

பொம்மைவெளியில் 2 ஆம் குறுக்கு வீதியில் ஒரு வீடு தரைமட்டமானது

முஸ்லிம் வட்டார சேமக்காலையிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. (அ-3-ரி)

## நாச்சிமார் கோவி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்து வெடித்தன.

நாச்சிமார் கோவிலடியைச் சேர்ந்த மதியாபரணம் பத்மாஜினி (35) வீட்டின் மீது வீழ்ந்த ஷெல்லுக்குப் பலியானார்.

பீரங்கி ஷெல் தாக்குதலினால் பலர் காயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன. (அ-3-ரி-113)

## நல்லூர்....

[1 ஆம பக்கத் தொடர்ச்சி]

பெற்றது. இரண்டு ஹெலிகள் நல்லூர் ஆலயப் பகுதியை ஐந்து, ஆறு தடவைகள் வட்டமிட்டன. அவற்றில் ஒன்று திடீரென றொக்கட் தாக்குதலை நடத்தியது.

தேர்க் கொட்டகைக்கு சுமார் 3 அடி தூரத்தில் றொக்கட் விழுந்து வெடித்தது.

தேர்க் கொட்டகைக்கு அருகில் நின்ற அச்சுவேலியைச் சேர்ந்த புஸ்பராணி[30 வயது] காயமடைந்தார்.

வைரவர் கோவிலுக்கு முன்னால் மரநிழலில் நின்ற கந்தர்மடத்தைச் சேர்ந்த ஆனந்தராசா[50 வயது] என்பவரும் காயமடைந்தார்.

அதே வேளை தெற்கு வீதியில் ஏவப்பட்ட றொக்கட் ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டது.

தேர்க் கொட்டகைக்கு அரு[illegible] கக் காட்சியளித்தது.

# அல்லைப்பிட்டியில்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைப் பிரிவு முன்னேறி வந்ததாக மற்றொரு செய்தி தெரிவித்தது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

கடந்த வியாழனன்று ஊர்காவற்றுறையில் தரையிறக்கப்பட்ட துருப்புக்களில் ஒரு பகுதியினரோ அல்லது—

வேலணை - அராலிச் சந்தியில் நேற்று முன்தினம் தரையிறக்கப்பட்டதாகக் கூறப்படும் துருப்புக்களோ இவ்வாறு அல்லைப்பிட்டிக்கு முன்னேறியிருக்கக்கூடும் என்றும் கருதப்பட்டது.

ஆனால் ஊர்காவற்றுறைப் பகுதியுடன்நேரடித்தொடர்பு ஏதும் இல்லாததால் துருப்புக்கள் முன்னேற்றம் தொடர்பான செய்தியை உறுதிப்படுத்த முடியவில்லை.

ஆனால் வேலணை, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் இருந்து தலைக்கேரி வழியாக இராணுவத்தினர் முன்னேறி அல்லைப்பிட்டிப் பக்கமாக வந்ததாக மண்கும்பானில் இருந்து வந்த சில முஸ்லிம் பொதுமக்கள் தெரிவித்தனர்.

இராணுவத்தினரின் வருகையை அடுத்து அப் பகுதியிலிருந்த முஸ்லிம்களில் பெரும் எண்ணிக்கையோனார் கடல் மார்க்கமாக அராலி, நாவாந்துறைக் கரைகளுக்கு வந்து சாவகச்சேரிப் பகுதிக்கு நேற்று மாலை சென்றனர். இவர்களில் பலரை நேற்று மாலை முத்திரைச் சந்திப் பகுதியில் காண முடிந்தது.

நேற்றுப் பிற்பகலில் அல்லைப்பிட்டியிலிருந்து மண்டைதீவுக்கு முன்னேறும் முயற்சியில் இராணுவம் பொதுமக்களைக் கேடயமாக முன்னே வரச்செய்து பின்னே வந்ததாகக் கூறப்பட்டது.

இராணுவம் மண்டைதீவு முன்னேறுவதாக அறிந்து அங்கிருந்து ஒரு சிலர் சுமார் ஐந்து மைல் கடலை நீந்திப் பாஷையூர் வந்துசேர்ந்தனர்.

அல்லைப்பிட்டி, மண்டைதீவுப் பகுதிகளில் பல வீடுகள் எரிக்கப்பட்டதாக, கடற்பீரங்கியாலும் வீடுகள் எரிந்ததாகவும் நீந்தி வந்தவர்களில் இருவரான இ. உதயன் [28], ஆ. ராஜன் [20] ஆகியோர் பாஷையூரில் வைத்து உதயனுக்குத் தெரிவித்தனர்.

மண்டைதீவில் கடற் பீரங்கிக் குண்டினால் 3 பேரும், பொம்மர் குண்டு வீச்சினால் 3 பேரும் கொலையுண்டதாகவும், கடலில் நீந்தி வந்து கொண்டிருந்த போது ஒருவர் ஹெலி சுட்டு இறந்ததாகவும் அவர்கள் மேலும் தகவல் தந்தனர்.

இதற்கிடையில்—

ஊர்காவற்றுறையை அரசுப் படைகள் முற்றாகத் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விட்டதாகவும்—

'னால் மண்டைதீவுப் பகுதி முழுவதும் போராளிகள் பெருமளவில் கண்ணி வெடிகளை வைத்திருப்பதனால் அரசுத் துருப்புக்கள் அப் பகுதியை நோக்கி முன்னேற முடியவில்லை என்றும்—

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்றுக் காலை கூறியதாக இந்திய வானொலி அறிவித்தது. [அ-உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## திரு. செல்லப்பா சுப்பிரமணியம்

[பாண்டியந்தாழ்வு]

திரு. செ. சுப்பிரமணியம் (இளைப்பாறிய சிறைச்சாலைக் களஞ்சியப் பொறுப்பாளரும், பாண்டியந்தாழ்வு நரசிம்ம ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தா) 25 - 08 - 90 ல் காலமாகிவிட்டார்.

இவர் இரத்தினத்தின் அன்புக் கணவரும், இரத்தினசிங்கம் (முன்னாள் அரசாங்க பொறியியல் கூட்டுத் தாபனத்தின் D.O.A யும் தற்போது கட்டடத் தொழில் நுட்பவியல் நிறுவன அதிபர்) அவர்களின் அன்புத் தந்தையும், மல்லிகாவின் (ஆசிரியை புனித அந்தோனியார் மகளிர் பாடசாலை) மாமனாரும், தயாபரன் (லண்டன்), கிரிதரன் (துரைராஜா அசோசியேட்ஸ் யாழ்.), சத்திபவாணி, சுதர்ஷினி, சாயினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவிகள்), சஞ்சீவன் (பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (25 - 8 - 90ல்) நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத் தருகின்றோம்.

தகவல்:
சு. இரத்தினசிங்கம் [மகன்]

73, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். [13921]

## வைத்திலிங்கம் நடராசா

[பொறுப்பதிகாரி பிரதேசசபை அச்சுவேலி]

வசாவிளானைச் சேர்ந்த வ. நடராசா 20-08-90 இல் அகாலமரணமானார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் தம்பதிகளின் ஏகபுதல்வனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், குணபாலன் (அரசாங்க நில அளவையாளர் நாரந்தனை), நிர்மலா, வதனா (யாழ். சென். யேம்ஸ் தட்டச்சு நிலைய ஆசிரியை), றஞ்சிதா, ஜெயந்தா, தவபாலன், லிங்கபாலன்(தெல். ப. நோ. கூ. சங்கம்) ஆகியோரின் அன்புத் தந்தையும்; பராசக்தியின் அன்புச் சகோதரனும்; காலஞ்சென்ற சின்னையா (விவசாய போதனாசிரியர்), கதிர்காமராஜா (யாழ். பல்கலைக்கழகம்), செல்வரத்தினம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 08 - 90 அன்று அச்சுவேலியில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ந. குணபாலன் [மகன்]

[13919]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org